# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2143/47 - 2019 ඔක්තෝබර් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.03

*2143/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**தேர்தல் ஆணைக்குழுவினால் 2019, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதியின் கீழ் 2141/ 52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளைகளுடன் தொடர்புடையதாக, தேர்தல் ஆணைக்குழுவினால் மேலதிகமாக வெளியிடப்படுகின்ற கட்டளைகள்**

தேர்தலுடன் தொடர்புடையதாக அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள் அல்லது கட்டளை மீறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்கள் அல்லது முறைப்பாடுகள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடாத்த வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கின்றபோது அதுதொடர்பாக தேவைப்படுகின்ற அச்சு அல்லது இலத்திரனியல் காகிதாவணங்கள், கலந்துரையாடல் குறிப்புக்கள், அறிக்கைகள், ஆட்சேர்ப்பு செய்தல்கள் அல்லது நியமனங்கள் வழங்கப்பட்டமை தொடர்பான அறிக்கைகள் போன்ற தகவல்கள் ஆணைக்குழுவிற்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவருக்கு வழங்கும்படி கட்டளையிடப்படும்போது, அத்தகவல்களை வழங்குவதற்கு அக்காகிதாவணங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஏதேனுமொரு கட்டளை அல்லது கட்டளைகள் மீறப்பட்டமை தொடர்பாக மேலதிக விசாரணைக்காக அல்லது வாய்மொழிமூல அல்லது எழுத்திலான கூற்றுக்களை பெற்றுத்தருமாறு தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவர் கட்டளையிடுவாராயின் அனைத்து விடயங்களும் உள்ளடங்கிய கூற்றுக்களை பெற்றுக்கொடுப்பதற்கு அவ்விடயங்களுடன் தொடர்புடைய அரச அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கு அவர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

1A - PG 4670 — 517 (2019/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*தேர்தலுடன் தொடர்புபட்டதாக அரச சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது தொடர்பான கட்டளைகள் மீறப்பட்டமை தொடர்பாக விசாரிப்பதற்கு, தேர்தல் ஆணைக்குழு எவரேனுமொரு அரச அலுவலரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைக்குமாயின் அவ் அரச அலுவலர் அதற்காக வருகை தந்து தேவையான அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்திக் கொடுக்கவும் தேவையான காகிதாவணங்களை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கு அவ்வலுவலர் கட்டுப்பட்டுள்ளார்.*

*இக்கட்டளைகளில் அரசாங்கமென குறிப்பிடப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள், ஆணைக்குழுக்கள், அரசாங்க வங்கிகள், அரசாங்க பல்கலைக்கழகங்கள், அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கம்பனிகள் போன்ற அனைத்து நிறுவனங்களும் 50% க்கு அதிக பங்குகளைக் கொண்டுள்ள அரச அல்லது அரச கம்பனிகளுக்குரிய நிறுவனங்களுமென பொருள்படும்.*

*அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்களெனக் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் முன்கூறப்பட்ட நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற மற்றும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சம்பளம் அல்லது கொடுப்பனவுகளைப் பெறும் அனைவருமென பொருள்படும்.*

*இக்கட்டளைகளில் காணப்படும் தகவல்கள் என்பதற்கு 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் தகவல்கள் தொடர்பான பொருள்கோடல் ஏற்புடையதாகும்.*

*இதுதொடர்பாக விநியோகிக்கப்பட்ட 2017.12.04 ஆந் திகதிய 2048/2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தவிசாளர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*என். ஜே. அபேசேகர,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*கொழும்பு,*
*2019, ஒற்றோபர் 02.*

*10-631*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.